J. R. T. S.] GENERAL SERIES. [No. 49.

# ABDOOL MESSEE,

OR

# THE JEWEL OF MERCY.

[A translation the life of Abdool Messee, as published in one of the quarterly papers of the Church Missionary Society.]

# கருணாநிதி.

## அப்துல் மேசி என்பவரின் சரித்திரம்.

அப்துல்மேசி என்பவன் அயோத்தியாபுரிக்கருகான தெல்லி நகரத்திலே, ௲௭௱௭௰௬ ஆண்டு மகம்மது மார்க்கத்தாருக்குள்ளே பிறந்து வளர்ந்தவன். அந்நாளிலே அவனுடைய பேர் சேகுசாலி. இவன் தன் பிதாவின் இடத்திலே தானே தன் பாஷையையும் பார்ஸ் அராபியென்னும் பிறபாஷைகளையும் படித்துத் தேறி இருபத்தொரு வயதாகிற அளவிலே தன் பிதாவினுடனேயுந் தனது ஊரை விட்டு இலக்குனோவென்கிற ஊருக்கு ஒரு பிழைப்பைத் தேடிப் போய் அங்கே சில நாள் இருந்து முன்பு ஒரு இங்கிலீசு வத்தகனிடத்திலும் பின்பு ஒரு துரையிடத்திலும் பண்டித வேலைக்கு ஏற்பட்டு அதினாலே பிழைத்து வந்தான்

2d Ed.] AMERICAN MISSION PRESS, JAFFNA. [5, 000
1844.

மகம்மது மார்க்கத்தில் அவன் மிகுந்த பத்தி உடையவனாய் அந்தத் துரையுடைய வேலைக்காரரில் ஒருவனையும் அந்த மார்க்கத்தில் அமைத்துக் கொண்டான். அந்தத் துரை அவன் மேலே ஒரு அற்ப குற்றத்தை எடுத்துக் காட்டிப் பேசினதற்காக அவன் அவருடனே மன வெறுப்பாய் வேலையையும் விட்டுப் போட்டு இனி இங்கிலீசுக்காரருடனே ஒருபொழுதுஞ் சேர்மானம் பண்ணுவதில்லை என்று நிச்சயித்துக்கொண்டு பலபல ஊர்களிலும் போய்ப் பலபல வேலைகளையுஞ் செய்து பிழைத்துக்கொண்டு தனது மார்க்க முறையிலே சற்றுந் தவறுதவனாய் நடந்து பிறரையும் அதில் உட்படுத்தப் பிரயாசப்படுகிறவனாய் இருந்தான். பின்பு இலக்குளேவின் நபாபுவின் கீழ் உத்தியோகமாய் ஒரு வருஷம் இருந்து திரும்ப அதையும் விட்டு மராட்ட தேசத்திற்குப் போய் யுத்தபுர இராசாவின் சேனபதியாகிய இபிருயிம் அலிகான் என்கிறவனுடைய குதிரைத் தளத்தில் ஒருவனாகச் சேர்ந்திருந்தான்.

அப்படி இருக்குங் காலத்தில் அந்த யுத்தபுர இராசாத் தன் சத்துருவாகிய சேவசிங்கென்னும் இராசாவைக் கொல்ல அமிர்கான் என்கிற படைத்தலைவனை அனுப்ப அவன் போம்பொழுது இந்தச் சேகுசாலியும் அவனுடைய தளத்திலேகூடிப் போனான். அந்த அமிர்கான் என்கிற படைத்தலைவனுஞ் சேவசிங்கென்னும் இராசா இடத்திலே போய்த் தான் சமாதானம் பேச வந்தவனென்று அவனுக்குக் கோருனிலே

சத்தியம் பண்ணிக் கொடுத்து அவனைத் தன் கூடாரத்துக்கு வரப் பண்ணித் தான் கபடமாய் வெளியே புறப்பட்டுக் கூடாரத்தின் கயிறுகளை அறுக்கச் சொல்லி இராசாவையும் அவனுடைய ஆட்களையும் அதற்குள்ளே அகப்படுத்தி அவர்களைக் குற்றிப்போடத் தன் படையாட்களுக்குக் கற்பித்தான்.

அப்பொழுது அந்த இராசாத் தன் சுரிகையினாலே கூடாரத்தைக் கிழித்து வெளியே வந்து ஒருவரும் அணுகக் கூடாதபடி மிகுந்த பராக்கிரமத்தைச் செலுத்திக் கொண்டு நின்றான். பின்பு தளமெல்லாம் ஒன்றாய்த் திரண்டு அவனை மடங்கடித்து அவனுடைய தலையையும் வெட்டி அதை ஒரு கொண்டாட்டமாய் ஊர் முற்றுங் கொண்டு திரிந்து பின்பு தங்கள் இராசாவிடத்துக்கு அனுப்பினார்கள்.

இந்தச் சேவகிக்கு மிகுந்த அழகுள்ள ஒரு இராச குமாரனும் இருக்க அவனுடைய தலை வெட்டப்பட்டு அவமானமாய்க் கொண்டு போகப்பட்டதையும் அப்படி அவனுக்கு வந்த சதிமானத்தையும் அவனுக்கு அவர்கள் செய்த நம்பிக்கைத் துரோகத்தையுங் கண்ட மாத்திரத்திலே ஒரு பயமுந் திடுக்காட்டமுங் கொண்டு அதினாலே வெறுப்பும் அடைந்தவனாய்ச் சேருசாலி தான் மேலும் அந்த வேலையிலே இருந்தால் அப்படிப்பட்ட காரியத்தைச் செய்யவும் வருமென்று எண்ணி எத்தனை இழிவான தொழிலைச் செய்தாலுஞ்

சமாதானத்துடனே பிழைக்க வேண்டும் என்று அந்த இரண சேவகத்தை விட்டு இலக்குனோ என்னும் நகரிக்கு பச்சை வன்னங் கூட்டி விற்று அதிலே சீவனம்பண்ணினான்.

௲அ௱௰. ஆண்டு முகணையிலே இவன் கானபுரத்துக்குப் போனான். அவ்விடத்திலே கிறிஸ்துமார்க்கப் போதகராகிய எனரி மார்த்தின் என்பவர் ஞாயிற்றுக்கிழமை பின்னேரந் தோறுந் தமது வாசலிலே பிச்சை வாங்க வந்து கூடுந் தரித்திரருக்குக் கிறிஸ்து மார்க்கப் போதனைகளைச் சொல்லி வருவார். அவ்விடத்தில் நாள் வரையிலே அவர்களை அன்றிப் பிறசனங்களும் அவர் சொல்வதைக் கேட்க வந்து கூடுவார்கள். அவர்களுடனே சேகுசாலியும் வேடிக்கை பார்க்க வந்து நின்றான்.

அவன் முதல்முறை வந்து கேட்டபொழுது அவர் பத்துக் கற்பனையை எடுத்து விஸ்தரித்து அவர்கள் அதை மீறினதற்காக மன்னிப்பையும் அதை இனிக் கைக்கொள்ளத் தேவ கிருபையையும் பெறும்படி இரட்சகராகிய இயேசுக் கிறிஸ்துவைப் பற்றி விசுவாசிக்க வேண்டுமென்று போதித்தார். அவர் சொன்ன இந்தப் போதகங்களைச் சேகுசாலி தனது மனதிலே அழுத்தி அவைகளை உற்றுணர்ந்ததினாலே அவைகளை மேலுந் தெளிவாய் அறிந்துகொள்ள வகை தேடினான். அதற்கு முன்னே தானே மகம்மது மார்க்கக் காரியங்கள் ஒன்றுக்கு ஒன்று ஒவ்வாமல் வே

துபாடாய் இருந்ததினாலே சந்தேகங்கொண்
டு முன் அறிந்தவைகளைப் பார்க்க இந்தக்
கிறிஸ்துமார்க்கப் போதனைகள் உத்தமமாயி
ருக்கவுங் கண்டு அதைத் தனது பிதாவுக்கு
ஞ் சொல்வித் தான் மேலும் அந்தக் காரிய
ங்களை அதிகமாய் அறிந்து கொள்ளும்படி அ
ந்த ஊரிலே தானே இருக்கத்தக்கதாக அங்
கே ஒரு பிழைப்பைத் தேடிக் கொடுக்கக்
கேட்டுக் கொண்டான். அவன் அந்தப் போ
தகரிடத்தில் இருந்த சபாத்தென்கிறவனுடை
ய சிநேகிதன் ஒருவனுடனே பழக்கமாய் இ
ருந்து அவனை அண்டி அவன் வழியாய் இவ
னைச் சபாத்தென்கிறவனுக்குப் பார்ஸ் பாஷை
எழுத்துக்காரனாக ஏற்படுத்தினான். இவனுந்
தன் உட் கருத்தை வெளி விடாமல் அங்கே
தானே வாசமாய் இருந்துகொண்டு பலவ
கையினாலும் கிறிஸ்துமார்க்கப் போதகங்களை
அறியப் பிரயாசப்பட்டு அந்தப் போதகரு
டைய ஒரு சிநேகிதன் ஷோக இருந்து கிறி
ஸ்துமார்க்கப் பாடங்களைப் படித்துக்கொண்
டிருந்த அந்த ஊரிற் கிறிஸ்துமார்க்க இளை
ஞர்களிடத்திலே அவர்கள் படிக்கும் பாடங்க
ளின் கருத்துக்களையே ஆராய்ந்து விசாரித்
துக் கொண்டு வந்தான். அவர்களிலே அந்த
க் காரியங்களைப் பட்சமாகத் தனக்குச் சொ
ல்லி விளங்கப்பண்ணின ஒருவனைத் தன் சீவ
னுள்ள நாளெல்லாந் தனது உவாத்தியாரெ
ன்று சொல்லுவான்.

பின்னும் அந்தப் போதகர் புதிய ஏற்பா

ட்டை இந்துஸ்தானப் பாஷைப் படுத்தின
பொழுது அந்தப் புத்தகம் இவன் கையிலே
கட்டும்படியாக வந்தது. அப்பொழுது அ
தினுள்ள காரியங்களையும் அறிய நல்ல சமய
மென்று வாசித்து அதினாலே தன்னுடைய
நிலைமையையுந் தனது இருதயத்தின் குணங்
களையும் மட்டுக்கட்டினதினாலே இதுவே உ
ண்மையான மார்க்கமென்று தனக்குள்ளே நி
ச்சயம்பண்ணிக்கொண்டு அதைப் புறத்தியி
லே காட்டாமல் இருந்து அந்தப் போதகர்
அவ்விடத்தை விட்டுக் கல்க்குத்தாவுக்குப் போ
க முயலும் பொழுது அவன் அவரிடத்திற்
போய்த் தன் உணர்ச்சியை அவருக்குச் சொ
ல்லித் தான் மேலே நடக்கவேண்டிய வழிவ
கைகளை அவரிடத்திலே கேட்டுக்கொண்டு த
னக்கு ஞானஸ்நானமுங் கொடுக்கச்சொல்லிக்
கேட்டான்.

அப்பொழுது அவர் அவனுடனே நீ இந்
த எண்ணத்தை வழுவவிட்டு உண்மைத் தப்
புள்ளவனும் போகப்படாதென்று பயபத்
தியான புத்திகளைச் சொல்லி எச்சரித்து அ
வனைத் தம்முடனே கல்க்குத்தாவுக்கு அழை
த்துப் போனார். அவனுடைய மன உண்
மையைச் சோதித்து அறிந்து அவன் விருப்
பத்தின்படி அவனுக்கு ஞானஸ்நானங் கொடு
க்கிறதற்கு அங்கே அவர் நெடுநாளாக இராததி
னால் விறவுன் என்கிற பின்னொரு போதகரிட
த்திலே அவனை நிறுத்தி அவர் வேறொரு ஊரு
க்குப் போய்விட்டார்.

அவரும் ஐந்துமாதமளவாகப் பின்னும் அவனுடைய நடபடிகளை மனப் பூரணமாகச் சோதித்து அறிந்து, ௲அ௱௩௰ ௵. ஆனி௴ ௨ந். திகதி அவனுக்கு ஞானஸ்நானங் கொடுத்தார். அந்தக் காரியத்தைப்பற்றி அந்தப் போதகர் தமது சிநேகிதர்களில் ஒருவருக்கு எழுதுகிறதாவது.-போன ஞாயிற்றுக்கிழமை சேகுசாவி என்பவனுக்கு ஞானஸ்நானங்கொடுத்தேன். அந்தச் சமயத்திற் பெரியோர்களுஞ் சிறியோர்களுமாகிய பலவகைப்பட்ட தேவபத்தியுள்ள சனங்கள் வந்து கூடியிருந்தார்கள். இந்தக் கல்க்குத்தாப் பட்டினத்தாருடைய மனதிலே இந்தக் காரியம் அதிகங் கனப்பட்டதாகப் பதிந்திருக்கின்றது. நானும் அதற்காக மிகவும் மனப்பூரணப்பட்டேன். அவனுடைய சமாசாரங்கள் எவர்களும் வியக்கத்தக்கதாயிருக்கின்றது. அவன் குணப்பட்ட வழிவகைகளை நான் நன்றாய் விசாரித்து அறிந்து மிகவுந் திருத்தியடைந்தேன். அவனுடைய ஞானஸ்நானப்பேர் அப்துல் மேசி. அதின் கருத்துக் கிறிஸ்து அடியான். என்பதே.

அந்நாள்த்தொடுத்து அந்தப் போதகருடைய சபையாரிற் சிலருடைய தயவைப் பெற்று அவர்கள் சொல்லும் புத்திகளினாலே தன் கேடான நிலைமையையும் இரட்சகர் மூலமாய் வரும் ஈடேற்றத்தையும் மென்மேலும் அறிந்து கொண்டான். முன்னே தான் ஒரு கேடுள்ள பாவியென்று பொதுவாய் அறிந்தாலும் இப்பொழுது எவ்விதத்தினாலுந் தான் செய்த பா

வங்களை எண்ணியெண்ணி உற்று உணர்ந்து கத்தரிடத்திலே மன்னிப்பைப் பெறத் தேடினதினாலே அவன் உண்மையாய்க் குணப்பட்டவனென்று எண்ணவேண்டியது. தன் பாவக்குணங்களையுஞ் சுவிசேஷபோதகங்களையும் எத்தனை அதிகமாக அறிந்துகொண்டானோ அத்தனை அதிகமாக மனத்தாழ்மையும் ஒழுக்கமுமுள்ளவனாய் இருந்தான்.

சிலநாளைக்குப் பின் அந்தச் சபையாரிற்சிலர் அவனைப் பார்த்து நீ உன் சனங்களுக்குள்ளே போய் அவர்களுக்குப் புத்திசொல்லவேண்டுமென்று அதிக விருப்பத்தினுடனே சொன்னார்கள். அதற்கு அவன் வேதவாக்கியத்தின் கருத்துக்களிலே தான் அறிந்தது போதாதென்றுந் தான் அதற்கு அபாத்திரனென்றுந் தன்னை அந்த வேலையில் ஏற்படுத்த வேண்டாமென்றும் அவர்களைப் பின் சென்று கேட்டுக்கொண்டு பின்னும் ஒன்றரை வருஷமளவாக யாதொரு பிரதான வேலை இல்லாமல் அவ்விடத்திலே இருந்துவிட்டான்.

அந்த நாட்களிலே ஞாயிற்றுக் கிழமைதோறும் வந்து கூடுகிற கிறிஸ்தவர்களுக்கும் மற்றுஞ் சனங்களுக்கும் வாடிக்கையாய்ப் புத்திசொல்லி வருவான். வேதத்திலுள்ள அரிதான கருத்துக்களைப் பிறருக்கு வெளிப்படுத்திச் சொல்ல அதிலே தான் அறிந்தது போதாதென்று கண்டதினாலே அவைகளைத் தனக்கு அன்பான ஒருவரிடத்திலே போய்க் கேட்டுக் கேட்டுக் குறிப்பாய் எழுதி வைத்துக்கொ

ண்டு அதைப் பிடித்துத் தன்னிடத்திற் பிரச
ங்கங் கேட்க வருகிறவர்களுக்கு அவர்கள் ம
னதில் ஊன்றத்தக்கதான புத்திகளை யிருந்த
தேசத்துடனே சொல்லுவான். அப்படியே
கேட்டவர்களில் மகம்மது மார்க்கத்தார் ஐந்
து பேர் அந்தப் புத்திகளை ஏற்றுக்கொண்டு
கிறிஸ்து மார்க்கத்திற் சேர விரும்பினார்கள்.
அவர்களுடைய குணங்களையும் நடபடிகளை
யும் நன்றாய் ஆராய்ந்து அவர்களுக்கு ஞான
ஸ்நானம் பண்ணப்பட்டது.

மகம்மது மார்க்கத்தாரில் வேறு அநேகர்
அவனுடனே யிருந்த எதிரிடைகளும் பண்ணி
னார்கள். எப்படியெனில் அவனைக் கிறிஸ்து
மார்க்கத்தை விட்டுத் தங்கள் மார்க்கத்திலே
திரும்ப வரச் சொல்லியும் அல்லது அந்த
ஊரை விட்டுப் பிறதேசங்களுக்குப் போய்
விடச் சொல்லியும் அநேகந்தரங் கைக்கூலிக
ளும் பொருத்தினார்கள். அவைகள் ஒன்றி
லும் அவன் இணங்காததினாலே அந்த வயிரா
க்கியத்தை மனதிலே வைத்துக்கொண்டு சில
அற்ப காரியங்களைக் கொண்டு போய் நியா
யத்தலங்களில் அவன் மேலே முறையிட்டு அ
வனை அங்கே அழைப்பித்து இப்படியே ப
கை சாதித்தார்கள். இதற்கெல்லாம் அவன்
கிறிஸ்துமார்க்க முறையிலே தவறாமற் பொ
றுமையுடனேயுஞ் சாந்தத்துடனேயும் இருந்
தான். திரும்ப அவ்விடத்திலே இப்படியா
ன பகையுங் குரோதமும் உண்டு பட்டதினா
லே சிலர் அவனை அவ்விடத்தை விட்டுப் பி

ன்னொரு ஊருக்குப் போய் இருக்கச் சொல்ல அவனுங் கேட்டு அங்கே போய் இருந்தான். அவ்விடத்திலும் அவன் சொல்லும் புத்திகளும் அவனுடைய உத்தம நடையும் அநேகருக்கு நன்மை உண்டாக்குகிறதாய் இருந்தது.

கஅ௱ய௰உ. ஆண்டுக் கடைசியிலே இந்த அப்துல் மேசி ஒரு உபதேசியாக நியமிக்கப்பட்டு ஆகிருவென்னும் பட்டிணத்திற்குப் போகும்படி அவ்விடத்திற் போதகராக இருந்த சேரி என்பவருடனே கூடிக்கொண்டு ஓடத்தில் ஏறிக் கங்கையாற்றிலே பிரயாணம் பண்ணும் பொழுது அவனுடைய குணத்தையும் நடையையுங் கண்ட அந்தப் போதகர் ஒரு காகிதத்திலே எழுதுகிறதாவது.

நான் அறிந்தளவுக்கு என்னைக் குறித்து நான் சந்தேகப்பட்டாலும் இந்த அப்துல் மேசி என்கிறவனைப் பற்றிச் சந்தேகப் படுகிறதற்குச் சற்றும் இடமில்லை. மேலும் ஆற்றிலே ஓடத்தில் ஏறி நாங்கள் போகப்போக அவன் தான் கூட்டி வந்த சில பிள்ளைகளுக்கு வாசினை பழக்கிறதும் வேதவாக்கியங்களை வாய்ப்பாடம் பண்ணச் சொல்லிக் கொடுக்கிறதுமாய் இருக்கிறான். சாதி பேதத்தைப் பற்றி இந்த ஊரவர்கள் தருக்கிக்கும் பொழுது அந்தப் பிள்ளைகளைப் பார்த்து இந்தக் காரியத்திற்கு அத்தாட்சி கொடுக்கத்தக்க யாதொரு வேதவாக்கியம் உங்களுக்கு நினைப்புண்டோ என்று கேட்க அவர்கள் மிகுதியாக அதற்

கிலைசவான வாக்கியங்களைச் சொல்ல அதைக் கேட்டு அவனுடனே தருக்கம்பண்ணுகிறவர்கள் ஆச்சரியப்படுகிறார்கள். அவன் உண்டாக்கின ஞானப்பாட்டுக்களை அவனும் அந்தப் பிள்ளைகளும் மற்றுள்ளவர்களும் ஓராத்தங்கும் இடங்களிலே கிறிஸ்துநாதருடைய அன்பான திரு நாமத்தைத் துதித்துப் பாடுவார்கள் என்பதே.

அப்பாலும் இந்த அப்தால்மேசி என்பவன் ஆகிறுவென்னும் பட்டினத்திலே போய்ச் சேர்ந்து அவ்விடத்திலே உபதேசியாகச் சனங்களுக்குப் புத்தி சொல்லிக் கொண்டிருக்குங் காலத்தில் நாள்தோறும் அந்தக் கேரிம்யன்னும் போதகருடனே வேதத்தில் ஒவ்வொரு பகுதியை வாசித்து வாசித்து அரிதான கருத்துக்களை விரிவாய் அவர் சொல்ல எழுதி வைத்துக் கொண்டான். மேலும் மத்தேயுவின் சுவிசேஷம், ரோமருக்கும், எபிரேயருக்கும் எழுதப்பட்ட நிருபங்கள். இவைகளுக்குப் பொருள் விளங்க அந்தப் போதகருடைய துணையினாலே உரை கட்டினான்.

அந்தப் போதகர் அவ்விடத்தில் இருந்த இரண்டு வருஷத்துக்குட் பலவிதங்களினாலுங் கிறிஸ்து வேதத்திலுள்ள பொருள்களை அதிகமாக அறிந்து தேறினதினாலே தன்னுடைய வேலையைத் திட்டமாய் நடப்பிக்கிறதற்குங் கிறிஸ்து மார்க்கத்துக்கு எதிரிடையாய்ப் பேசி வருகிறவர்களுக்குத் தேவ ஆவியின் அரு

னிருலே எந்த வேளையிலுந் தகுதியாக எதி ருத்தாரங் கொடுக்கிறதற்குஞ் சாமாத்தியமு ள்ளவனுனன். இன்னும் இந்தப் போதகரிட த்திலே தான் பெற்ற நன்மைகளையும் அவரு டைய பட்சத்தையும் மரணுந்தமளவும் மற வாதவனுய் இருந்தான்.

இந்த அப்துல்மேசி எட்டு வருஷமளவாக உபதேசியாய் இருந்து பின்பு கிறிஸ்துமார்க் கப் போதகராகப் பட்டம் பெற்ருர். அதற் குப் பின் அந்தத் தேசத்தார் அவருடனே தா ங்கள் பண்ணின விரோதங்களை எல்லாம் விட் டு அவரை ஒரு போதகராக மதித்து நடந் தார்கள்.

இவர் குணப்பட்ட பின் முதல்முதல் இல க்குனே என்னும் நகரியில் இருந்த தம்மு டைய இனத்தாரைக் காணப் போனபொழு து அந்தப் பட்டிணத்தார் இவருக்குச் செய் ய நினைத்த தீங்கினுலே இவர் மறு வேஷம் போட்டுக்கொண்டு இரவிலே ஒளித்துப் போ ஞர். இரண்டாந்தரம் போனபொழுது அ வர்களுடைய நியாயப்பிரமாணப்படி செய் யும் ஆக்கினைக்கு ஏதுவாய் இருந்தும் அவ்வி டத்தில் இருந்த இராசா சடுதியாய் மரணித் ததின் நிமித்தம் தப்பிப் போய்விட்டார். அ வர் போதகராகப் பட்டம்பெற்ற பின் அந் த இடத்திற்கு இயாதொரு இடைஞ்சல் இல் லாமல் வெளியரங்கமாய்ப் போக்கு வரவு ப ண்ணிக்கொண்டு இருப்பார். அப்பொழுது அவ்விடத்து இராசாவின் குடும்பத்தாரிலுஞ்

சிலர் அவரை மதிப்பாகப் பேணி நடத்துகிறார்கள்.

அவர் பின்னும் அங்கே இருந்து அந்தத் தேசத்தில் உள்ள பிரதான பட்டிணங்களுக்கு முறைக்குமுறை போய் எவ்விடங்களிலேயுந் தன்னுடைய நேர்மையும் உண்மையும் விளங்கத்தக்கதாக நடந்து சமயங் கண்டபொழுதெல்லாம் கிறிஸ்து மார்க்கப் போதனைகளை முயற்சியுடனே எவர்களும் விரும்பிக் கேட்கத்தக்க விதமாகப் பிரசங்கிப்பார். அவருடைய பிரசங்கத்தைச் சனங்கள் மிகுதியுங் கருத்தாய்க் கேட்பார்கள்.

மேலும், ௲௮௱௨௫ ஆண்டு கார்த்திகை மாதம், கற்குத்தாவுக்கு வந்து திரும்பிப் போம்பொழுது இங்கிலேண்டில் இருந்த தமது முதிர் வயதான மாதாவையும் மற்றும் இனத்தாரையுங் காணும்படி போனார். அவ்விடத்தில் உள்ளவர்கள் கிறிஸ்து மார்க்க உண்மைகளை மிகுதியும் அங்கீகரிப்பாய் ஏற்றுக்கொண்டதினால் அவ்விடத்திலேதானே அவர் போதகம் பண்ணிக்கொண்டு இருந்தார்.

அப்படியே அவர் அவ்விடத்தில் இருக்கும்பொழுது அவருக்கு ஒரு கடினமான வியாதி உண்டுபட்டதினாலே அவர் ஓய்வுநாளில் தேவாராதனைக்கு வராமல் இருந்ததை இலக்ஸ்மோர் என்கிற வைத்தியர் கேள்விப்பட்டு அவரைப் பார்க்கும்படிக்குப் போனார். அப்பொழுது அவர் சாகிறதற்கு ஏதுவான உபத்திரவமாய் இருந்ததினாலே அவரைத் தனது

வீட்டுக்குக் கொண்டு வந்து ஒரு அறை வீடுங் கொடுத்து அதிலே இருக்கப்பண்ணிப் பராபரித்து மருந்து செய்தார். அவர் தனது இனத்தாருக்குள்ளே தான் இருந்து இறந்து அவர்கள் மோசமான சடங்குகளைச் செய்யாமற் கிறிஸ்துமார்க்கத்தாருக்குள்ளே தான் வந்து சேர்ந்தது தனது மனதுக்கு ஒரு ஆறுதலென்று சொல்லிப் பின்பு மரணத்தின் முனையை இரட்சகர் மழுக்கிப் போட்டதினாலே தனக்கு மரண பயங்கரம் இல்லையென்றுஞ் சொல்லி நிறைந்த சமாதானமுள்ளவராய்த் தோற்றினார்.

அவர் தாஞ் சாக முதனுள் தமது சிநேகிதரை அழைத்து வைத்து ஒரு மரண சாதனம் எழுதச் சொல்லி அதிலே தாம் விலை கொடுத்துக் கொண்ட ஒரு வீட்டைத் தமது மாதாவுக்குந் தமது புத்தகங்களை வேதாகமச் சங்கத்துக்குந் தமது உடை உத்தரிகங்களைத் தமது மருமகனுக்குங் கொடுக்கும்படி நியமித்து அதன் பின்பு பராபரனுக்குத் தோத்திரம், இவ்வுலக காரியங்களை முடித்துக் கொண்டேன் என்றார். அப்பொழுது தமது கைகளைக் குவித்துக் கருத்தாவே, எனது மாதாவை உமக்கு ஒப்புக் கொடுக்கிறேன் என்று சொல்லிப் பின்பு அங்கே நின்ற ஒரு சிநேகிதனைக் கிட்ட வர அழைத்துத் தமது கைகளை மறுபடியும் மன்றாட்டமாக எடுத்துப் பிதாக் குமாரன் பரிசுத்த ஆவியாகிய பராபரனே, இவன் மேலே கிருபையாய் இருமென்றார்.

பின்னும் அங்கே வேத போதகங்களைத் தன்னிடத்திலே படித்துக்கொண்டிருந்த ஒருவனை அழைத்து அவ்விடத்திலே கிறிஸ்துமார்க்கத்திலுள்ள சில விசேஷித்த காரியங்களைப் பத்தி வினவிடைபண்ணிக் கருத்தருடைய செபத்தை முற்றும் அவனுக்கு விரித்து உரைத்து அவனுடனே நான் சுகப்பட்டு எழும்பினால் உனக்கு ஞானஸ்நானங் கொடுப்பேன் நான் இறந்துவிட்டால் இவ்விடத்தில் இருக்குங் குருமாரிடத்திலே நீ ஞானஸ்நானம் பெறுவாயாக என்று அவனுக்குச் சொன்னார்.

அவருக்கு மிகுந்த வருத்தமாய்ச் சேற்பனந் தொட்டிருந்தபொழுது அவர் புது ஏற்பாட்டிலே யோவான் எழுதின, ௪. அதி. வாசிக்கச் சொல்லி வாசித்தபின் தாம் அதிக விருப்பமாய்ப் பாடி வருகிற ஒரு பாட்டைப் பாடச் சொல்லி அதைப் பாடும்பொழுது தாமுங் கூடப் பாடித் திரும்ப இரண்டாந்தரமும் அதைப் பாடச் சொல்லிப் பாடுகிறபொழுதே அவருடைய அறிவு மயங்கிப் பேச்சுத் தடுமாறிப் போய் அன்றிரவு பொழுதுபட்டு அஞ்சாறு நாழிகையென்ன அவருடைய ஆத்துமா இவ்வுலகத்தை விட்டுப் பரலோகத்திற் சேர்ந்தது.

அவர் மரணித்தது, ௲௮௱௨௰ ஆண்டு. பங்குனி மாதம், ௭. திகதி. மற்றநாட் காலமே அவ்விடத்துத் துரைமாரும் மற்றும் அந்த ஊரிற் கிறிஸ்தவர்களுங் கூடி வந்து ஒரு துரை அதற்குக் குறித்த வேதவாக்கியம் வாசிக்க

அவருடைய பிரேதத்தை அவருடைய வீட்டின் உள் முற்றத்திலே அடக்கம் பண்ணி அதற்கு மேலே ஒரு சிகரமுங் கட்டுவித்து ஒரு கல்வெட்டும் இங்கிலிசுப் பாஷையிலும் பாரிசுப் பாஷையிலும் எழுதிப் பதிப்பித்தார்கள்.

முற்றிற்று.